2016 - க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை பெறுபேற்று அட்டவணையிலுள்ள உரிய குறியீடுகளை அறிந்துகொள்வதற்கான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| A | விசேட சித்தி |
| B | மிகத் திறமைச் சித்தி |
| C | திறமைச் சித்தி |
| S | சாதாரண சித்தி |
| F | சித்தியின்மை |
| + | தோற்றவில்லை |
| X | பெறுபேறு தீர்மானிக்கப்படவில்லை |
| N | உரிய பாடத்தின் பெறுபேறு இரத்துச்செய்யப்பட்டுள்ளது |
| H | இப்பாடத்திற்கான பெறுபேறு இடைநிறுத்தப்பட்டுள்ளது |

உங்கள் பெறுபேறு இடைநிறுத்தப்பட்டிருப்பின் விசாரணைக் கிளையின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தொலைபேசி இலக்கம் : 011-2786214

- கல்விச் செயலாளரின் இலக்கம் : 2009/16 சுற்றுநிருபத்திற்கமைய க.பொ.த(உ.தர)ப் பரீட்சைக்குரிய பிரதான பாடப் பிரிவுகள் நான்கு ஆகும்.

1. உயிரியல் விஞ்ஞான பாடத்துறை
2. பௌதீக விஞ்ஞான பாடத்துறை
3. வணிகப் பாடத்துறை
4. கலைப் பாடத்துறை

மேற்குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்திற்கு மேலதிகமாக ED/08/01/01/19 இலக்கமும் 2015.11.19ஆம் திகதியுமுடைய கடிதத்திற்கமைவாக தொழினுட்பவியல் பாடத்துறை பிரதான பாடத்துறை இரண்டின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

i. பொறியியற் தொழினுட்பவியல்
ii. உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

மேற்படி ஒழுங்குகளுக்கமைய ஒவ்வொரு பாடத்துறைக்குமுரிய பாடச்சேர்மானங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதுடன், க.பொ.த(உ.தர) - 2016 பரீட்சைப் பெறுபேறு வெளியிடும்போது மாவட்ட மற்றும் தீவளாவிய நிலைகள் இச் சுற்றறிக்கையின்படி ஒவ்வொரு பாடத்துறைக்கும் வெவ்வேறாக கணிப்பிடப்பட்டுள்ளன.

மேலேயுள்ள எப்பாடத்துறைக்கும் சாராத பாடச்சேர்மானங்களை தெரிவு செய்துள்ள பரீட்சார்த்திகளது பெறுபேறுகள் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு “வேறு பாடத்துறை” இன் கீழ் வெளியிடப்பட்டுள்ளன. அவர்களது மாவட்ட, மற்றும் தீவளாவிய நிலைகள் அந்த வகைக்குள் மட்டுமே வரையறுக்கப்பட்டு கணிப்பிடப்பட்டுள்ளன.

கடந்த க.பொ.த(உ.தர)ப் பரீட்சைகளின்பொழுது மேற்படி சுற்றுநிருபத்திற்கேற்ப “வேறு பாடத்துறை” இன் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்த சில பரீட்சார்த்திகள் தாம் கலைப்பாடத்துறைக்கு உரியவர்கள் என தவறாகப் புரிந்துகொண்டு கலைப் பாடத்துறையின் நிலைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்ததனால் சிக்கலான நிலைமைகளுக்கு முகம்கொடுத்துள்ளனர். ஆகவே எவரேனுமொரு பரீட்சார்த்தி தனது பெறுபேற்றை சரிபார்க்கும்போது அவரது பாடத்துறையை சரியாக இனங்கண்டுகொள்வதில் அவதானம் செலுத்தவும்.

**உதாரணமாக,**

கமல் கலைப் பாடத்துறைக்குரிய பரீட்சார்த்தி ஆவார். அவர் A சித்தி இரண்டும் B சித்தியும் பெற்றுள்ளார். அவரது மாவட்ட நிலை 258 ஆகவும் தீவளாவிய நிலை 1573 ஆகவும் உள்ளன.

நிமல், சிங்களம், பௌத்தநாகரிகம் மற்றும் கீழைத்தேய சங்கீதத்திற்கு தோற்றியுள்ளதுடன், மேற்குறித்த சுற்றுநிருபத்திற்கேற்ப இவர் “வேறு பாடத்துறை”க்கு உரியவர் ஆகும். இவர் 03 C சித்திகளை பெற்றிருப்பதுடன், இவரது மாவட்ட நிலை 13 ஆகவும் தீவளாவிய நிலை 128 ஆகவும் உள்ளன. அதற்கேற்ப கமலும் நிமலும் ஒரே மாவட்டத்திற்கு உரியவர்களாயினும் ஒரே பாடத்துறையை சாராததினால் அவர்களது மாவட்ட மற்றும் தீவளாவிய நிலைகளை ஒப்பிட முடியாது.

- கல்வி அமைச்சினால் தேசிய கல்விப் பீடங்களுக்கு மாணவர்களை உள்ளீர்க்கும்போது உயர்தர பிரதான பாடங்களில் இரண்டு சித்திகளை கவனத்திற்கொள்கின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுவதனால் குறைந்த பட்சம் பிரதான பாடங்கள் இரண்டில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளது Z புள்ளி கணிப்பிடப்பட்டுள்ளது.